**தலைப்பு 213 – கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**

-----------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 22 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில்

மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம்

உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| 2019 ஆம் வருடத்தின் பந்தியுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1.6.2(அ), 1.6.1(iii) | வருடாந்த தேய்மான சதவீதத்தினை சரியாக இடப்பட்டிருக்காமையினால் வாகன தேய்மான செலவினம் ரூபா 1,404,310 கூடுதலாக காட்டப்பட்டு இருந்தது. | சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். |

## 1.6. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 ஆதன பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதன பொறி மற்றும் உபகரணங்கள் கணக்கிலிடப்படும் போது கீழ்காணும் குறைபாடுகள் வெளிப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேய்மானம் மேற்கொள்வதில் ஏற்பட்ட தவறுகளினால் காணி மற்றும் கட்டடிங்களின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் முறையே ரூபா 83,766,584 மற்றும் ரூபா 30,104,542 தேய்மானம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு முறையே ரூபா 57,139,805 மற்றும் ரூபா 62,040,873 கூடுதலாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். |
| (ஆ) தேய்மானம் மேற்கொள்வதில் ஏற்பட்ட தவறினால் வாகன ஆரம்ப மீதி மற்றும் மீளாய்வு ஆண்டின் தேய்மானம் முறையே ரூபா 1,182,260 மற்றும் ரூபா 118,226 குறைவாகவும் திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 245,519 கூடுதலாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | .-மேற்படி- | . -மேற்படி- |

### 1.6.2 வாணிப முற்பணக் கணக்கு

இது தொடர்பாக கீழ்காணும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 ஆம் ஆண்டு முதல் அச்சு வேலைக் கட்டணமாக தனியார் கம்பனியொன்றிலிருந்து கிடைக்கப்பட வேண்டிய ரூபா 7,431,012 மீளாய்வாண்டிலும் அறவிட இயலாது போயிருந்தது. | அரச நிதி திணைக்களத்தின் ஆலோசனையினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக | பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய மீதியினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (ஆ) | மீளாய்வாண்டில் ஒட்டு மொத்தமாக கொடுக்கப்பட வேண்டிய கடன் மீதியினை ரூபா 100,078,738 கூடுதலாகவும் 2 அச்சகங்களுக்காக கொடுக்கப்பட வேண்டிய கடன் மீதியினை ரூபா 12,384,798 குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. 2013 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் ரூபா 1,521,750 க்கான கொடுக்கப்பட வேண்டிய மீதிகள் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உடன்பாடு உண்டு. | சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

திணைக்களம் தொடர்பாக வருமான பெறுவனவுகளை கணக்கிலிடப்படும் போது கீழுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சென்ற ஆண்டிற்கான ரூபா 62,258,364 மிகைக் கட்டணம் மீளாய்வு ஆண்டிற்கான மிகைக் கட்டணமாக கணக்கிலிடப்பட்டிருந்தது. | உடன்பாடு உண்டு. | சரியாக கணக்கிலிடப்பட வேண்டியமை. |

### 2.2 செலவின முகாமைத்துவம்

இது தொடர்பாக கீழுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 செலவின விடயங்கள் தொடர்பாக நூற்றுக்கு 18 முதல் நூற்றுக்கு 95 வரையிலான வீச்சில் ரூபா 15,675,287 ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | உடன்பாடு உண்டு. | சரியாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.3 பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளய்வாண்டிற்கான பொறுப்புக்கள், பொறுப்புக்களுக்கான கூற்றில், | 2019 செலவின பேரேட்டில் பதியப்பட்டில்லாமை. | சரியாக பட்டியல்களில் பதியப்பட |

| | | |
|---|---|---|
| பொறுப்புக்களுக்கான பட்டியலில் மற்றும் 2021 ஆம் வருட பேரேட்டில் முறையே ரூபா 143,978, ரூபா 68,070 மற்றும் ரூபா 167,233 என காட்டப்பட்டிருந்தன. | | வேண்டும். |

## 2.4 சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

இது தொடர்பாக கீழுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களின் அவதானம் | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நிதிப்பிரமாணம் 104 முதல் 109 | பாவனைக்கு உதவாத பிரயோசனப் படுத்த முடியாத மொத்தம் ரூபா 8,484,244 பெறுமதியான புத்தகங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணப்படி செயற்பட்டிருக்க வில்லை. | உடன்பாடு உண்டு. | நிதிப் பிரமாணம் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) சொத்துக்களுக்கான முகாமைத்துவ சுற்றறிக்கை | | | |
| (i) 2017 யூன் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2017 நிதி மற்றும் மக்கள் ஊடக அமைச்சின் சொத்துக்களுக்கான முகாமைத்துவச் | திணைக்களத்திற் குரிய சகல சொத்துக்களுக்கு மான விபரங்கள் கொம்ப்ட்ரோலர் தலைமை அதிபதி அலுவலகத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டியுள்ள போதிலும் | உடன்பாடு உண்டு. | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கை | அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. | | |
| (ii) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய இலக்கம் 4/2018 கொண்ட நிதி மற்றும் மக்கள் ஊடக அமைச்சின் சொத்துக்களுக்கான முகாமைத்துவச் சுற்றறிக்கை | 1/2017 சுற்றறிக்கையின் படி பொதுச் சொத்துக்கள் மற்றும் கிரய முகாமைத்துவ த்திற்கான 2019 சனவரி 01 ஆந் திகதி செயல்படும் படியாக சொத்துக்களை மதிப்பீடு மேற்கொள்வதற்கு செயற்பட்டிருக்கவில்லை. | .-மேற்படி- | --மேற்படி- |

## 2.5 வங்கி கணக்குகளை நடாத்திச் செல்லல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இனங்காணப்படாத ரூபா 17,321,538 க்கான பெறுவனவு மீதியினை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | மீதிகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

## 2.6 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு மீதான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேவையினை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 5 வருடங்கள் கழிந்துள்ள ரூபா 458,592 க்கான கடன் மீதியினை | அறவிடப்படுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பழைய கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டியமை. |

அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 2/2020 கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயலாற்று அறிக்கையினை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | விடை முன்வைக்கப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டியமை. |

### 3.2 வெளிநாட்டு உதவித் திட்டங்கள்

கீழுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சாதாரண கல்வியினை நவீனமயப்படுத்தலுக்கான திட்டத்தின் கீழ் ஆங்கிலம் மற்றும் கணித பாடங்களை மேம்படுத்துவதற்காக 2019 மற்றும் 2020 வருடங்களுக்காக ரூபா 35 மில்லியன் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 20,474,489 திட்ட நோக்கினைக்கு | இந்நோக்கங்களுக்காக கல்வினைச் செயலாளரின் அனுமதியினை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | திட்டத்தின் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்கு செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முரணாக திணைக்கள உத்தியோக நபர் கொள்ளளவினை மேம்படுத்தல், சிங்கள மற்றும் தழிழ் மொழிகளிலான சிறுவர் கதை புத்தகம் ஒன்றினை உருவாக்கல், 5 ஆந் தரத்திற்கான பாட புத்தக மீளாய்வு செயல் அமர்வுகளை நடாத்தப்படல் மற்றும் உபகரண கொள்வனவு ஆகியவற்றிற்காக செலவிடப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | அத்தோடு சிறார் மனதில் நல்லெண்ணங்களை விருத்தி செய்யும் குறிக்கோளுடன் ஓர் எழுத்தாளரைக் கொண்டு சிறுவர்களுக்கான கதைப் புத்தகமொன்று எழுதும் பொருட்டு திட்டத்திலிருந்து ரூபா 5,758,993 செலவிடப்பட்டு சிங்களப் பிரதி 155,475 மற்றும் தமிழ்ப்பிரதி 73,475 அச்சிடப்பட்டிருந்தன. இப்புத்தகங்களுள் ரூபா 2,072,500 பெறுமதி வாய்ந்த 82,900 புத்தகங்கள் 2021 மே 20 ஆந் திகதி வரையிலும் விநியோகம் செய்யப்படாது களஞ்சியசாலையில் சேமிக்கப்பட்டிருந்தன. | உடன்பாடு உண்டு. | ஒழுங்கு முறையாக புத்தகங்களை விநியோகம் செய்யவும் மற்றும் வரை காட்டியின் படி செயற்படவும் வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| (இ) திட்டங்களை செயற்படுத்தும் முறைமைக்கு அமைய ரூபா 39 மில்லியன் செலவிடப்பட்டு திணைக்களத்தின் புத்தகங்களை விநியோகம் செய்தல் மற்றும்விற்பனை செய்தல் முறைமையினை கணனிமயப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வு ஆண்டிலும் அதற்கமைய செயற்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | திட்ட நிதியங்கள் தொடர்பாக வரைகாட்டியினை செயற்படுத்தும் முறைமையின் படி செயற்பட வேண்டியமை. |

## 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான பாடப் புத்தகங்கள் விநியோகிக்கும் செயற்பாடுகள் முழுமையாக முடிக்கப்பட்டு இருந்த போதிலும் தொகை மீதி புத்கதங்கள் 20,000 விஞ்சிய பாடப் புத்தக வகை 128 உரிய ரூபா 593,839,740 பெறுமதி வாய்ந்த பாடப் புத்தகங்கள் 4,761,461 க்கான தொகையினை 2021 சனவரி 31 ஆந் திகதியில் களஞ்சியசாலையில் சேமிக்கப்பட்டிருந்தன. | இணங்குவதாக. | ஒரு வருடத்திற்கு தேவையாகும் பாடப் புத்தகங்களினை சரியான இனங் காணப்பட்டு அதன் படி செயற்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஒரு வருடம் தொடர்பாக தேவைப்படும் பாடப் புத்தகத்தினை சரியாக இனங்கண்டு கொள்ளாது பாடப்புத்தகங்களை அச்சிடப்படவதனால் அச்சிடப்படும் புத்தகங்கள் 02 வருடங்கள் வழங்கப்பட்டதன் பின்னரும் தொகை இருப்பு 25,000 புத்தகங்களையும் விஞ்சப்பட்டு 07 வகைக்குரிய ரூபா 48,239,420 பெறுமதிவாய்ந்த 412,632 புத்தகத் தொகையினை 2021சனவரி 31 ஆந் திகதிவரை களஞ்சியத்தில் சேமிக்கப்பட்டிருந்தது. | உடன்பாடு உண்டு. | .-மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டில் பாடப் புத்தகங்களுக்காக பணம் வழங்கும் போது பக்கங்கள் குறைவாக இருந்தவை மற்றும் கூடுதலாக இருந்தவைகளுக்கான முறையே ரூபா 17,039,257 மற்றும் ரூபா 16,636,231 அறவிடப்பட்டிருந்ததுடன் தாமதமாதல், GSM மதிப்பீடு வித்தியாசப் பட்டமையினால் ரூபா 62,696,397 தண்டப் பணமாக செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறாக பக்கங்கள் குறைவாகவும் மற்றும் கூடுதலாகவும் ஆகும் போது பாடப் புத்தகங்களின் உள்ளமைப்பு | உடன்பாடு உண்டு. | பணம் செலுத்தும் போதும் திட்டமிடும் போதும் கவனமாக செயற்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | வித்தியாசப்படுவதால் மாணவர்கள் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட கூடியதாகவும் இருப்பதனால் பணம் செலுத்தும் போதும் மற்றும் திட்டமிடும் போதும் அது பற்றி கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | முன்னைய வருடங்களில் அச்சிடப்பட்ட ரூபா 333,945,008 பெறுமதி வாய்ந்த மேலதிக புத்தகங்கள் 1,584,066 உம் ரூபா 96,915,726 பெறுமதி வாய்ந்த ஆசிரியர் கைந்நூல் 650,369 மற்றும் பெறுமதியினை கண்டு கொள்ளமுடியாத மேலதிக 23,742 புத்தகங்கள் மேலும் 158,775 ஆசிரியர் கைநூல்களும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் களஞ்சியசாலைகளில் விநியோகிக்கப்படாமல் இருந்தன. | உடன்பாடு உண்டு. | வருடாந்த புத்தக தேவைப்பாட்டினை மற்றும் சேமிப்புத் தொகையினை கவனத்திற் கொண்டு புத்தகம் அச்சிடப்பட வேண்டும். |
| (உ) | முன்னைய வருடங்களுக்கு மற்றும் மீளாய்வு வருடம் தொடர்பாக ரூபா 22,551,350 பெறுமதி வாய்ந்த பாடப் புத்தகங்கள் ஆசிரியர் வழிகாட்டிகள் மற்றும் மேலதிக புத்தகங்கள் 2021 பெப்ரவரி 28 ஆந் திகதியில் உள்ளவாறான அச்சிடப்பட்டு ஒப்படைக்கப் பட்டிருக்க வில்லை. | உடன்பாடு உண்டு. | உரிய தினத்தில் அச்சிடப்பட்ட புத்தகங்களை பெற்றுக் கொள்வதற்கான வேலைத் திட்டமொன்றினை தயாரிக்கப்படல் வேண்டியமை. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்டபணிக் குழாமினுள் 48 வெற்றிடங்கள் நிலவுகின்றதுடன் அப் பாடப்புத்தகங்களை தயாரிப்பதற்கு தேவையான 01 ஓவியர்ப் பதவி பக்கங்கள் தயாரிக்கப்படுவதற்கான 04 பதவிகள் இவ் வெற்றிடங்களுள் உட்பட்டிருந்தன. | உடன்பட்டுள்ளமை. | வெற்றிடங்கள் நிரப்பப் படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியமை |